### களத்திலும் இல்லை; மக்கள் மனதிலும் இல்லை என்றாலும் 'நானும் ரவுடிதான்' என்பது போல

# S.I.R.க்கு பழனிசாமி வக்காலத்து வாங்குவதில் ஆச்சரியமில்லை!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, நவ. 11 –

"எடப்பாடி பழனிசாமி களத்திலும் இல்லை; மக்கள் மனதிலும் இல்லை என்றாலும் 'நானும் ரவுடிதான்' என்பது போல 'என்னை ஏன் விமர்சிக்கவில்லை?' என்று wanted ஆக வண்டியில் ஏறுகிறார் பச்சைப் பொய் பழனிசாமி." "ஆட்சியில் இருக்கும் போது டெல்லி பிக்பாஸ்களுக்குப் பயந்து தமிழ்நாட்டின் உரிமைகளை அடகுவைத்தது போலத் தமிழர்களின் வாக்குரிமையை அடகு வைக்க துணிந்து விட்ட பழனிசாமி, SIRக்கு வக்காலத்து வாங்குவது ஆச்சரியமில்லை!" என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

"நானும் ரவுடிய்யா.. இந்த ஏரியாவுல ரவுடினு ஃபார்ம் ஆயிட்டேன்ய்யா" என வடிவேலுவின் காமெடியை நினைவுபடுத்துவது போல எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி நடந்து கொள்கிறார். எடப்பாடி பழனிசாமி களத்திலும் இல்லை; மக்கள் மனதிலும் இல்லை என்ற போதும் 'நானும் ரவுடிதான்' என்பது போல 'நானும் எதிர்க் கட்சித் தலைவர்தான்' என்று wanted ஆக வண்டியில் ஏறுகிறார் பச்சைப் பொய் பழனிசாமி.

சசிகலா, பன்னீர்செல்வம், தினகரன், செங்கோட்டையன் எனத் தொடர்ந்து பழனிசாமிக்கு எதிராகப் பேசுவது தினமும் ஊடகத்தில் வந்து கொண்டிருக்கிறது. அதனால், பதற்றமாகி தன் இருப்பையும் காட்டிக் கொள்ள ஊடகத்தில் எதையாவது உளறிக் கொட்டிக் கொண்டிருக்கிறார்.

**அரசியல் முதிர்ச்சி பற்றி பேசுவதா?**

அரசியல் முதிர்ச்சியைப் பற்றி எல்லாம் யார் பேசுவது? அதிமுக கட்சியின் பெயரில் உள்ள 'திராவிடம்' என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாது என்று சொன்ன 'மங்குனி'தானே நீங்கள். "படுத்தே விட்டான் ஐயா..." என்ற ரீதியில் பாஜகவுக்காக பழனிசாமி நடத்திய அடிமை ஆட்சியால் நீட் முதல் மின்சாரம் வரை தமிழ்நாட்டின் உரிமைகளை இழந்து தவித்தோம். இப்போது தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமைக்கும் அச்சுறுத்தல் தரும் பாஜகவின் SIRயை கண்டிக்க திராணியில்லாமல் வக்காலத்து வாங்கி கொண்டிருக்கிறார்.



SIR வழியாகத் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கப் பாசிச பாஜகவும் அடிமை அதிமுகவும் போட்ட சதிக்கு எதிராக திமுக எடுத்துவரும் உறுதிமிக்க நடவடிக்கைகள் பழனிசாமியை ஆட்டங்காண வைத்திருக்கிறது. மக்களைச் சந்தித்துத் தேர்தலில் வெற்றி பெற முடியாத கோழைகள், சிறுபான்மை யினர், பெண்கள், பட்டியலினத்தவர்களின் வாக்குரிமையை பீகாரில் பறித்தது போல், தமிழ்நாட்டிலும் பறித்துவிடலாம் எனப் போட்ட சதியை எதிர்த்து களப்போரட்டமும், சட்டப் போராட்டமும் நடத்திக் கொண்டிருக்கிறது திமுக.

**பழனிசாமியின் பகல் கனவு பலிக்காது!**

ஆட்சியில் இருக்கும் போது டெல்லி பிக்பாஸ்களுக்குப் பயந்து தமிழ்நாட்டின் உரிமைகளை அடகுவைத்தது போல இப்போது தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையை அடகு வைக்கத் துணிந்துவிட்ட பழனிசாமி SIRக்கு வக்காலத்து வாங்குவது ஆச்சரியமில்லை. முஸ்லிம்களைப் பாதிக்கும் வகையில் மோடி அரசு கொண்டு வந்த CAA சட்டத்தை ஆதரித்து விட்டு முஸ்லிம்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை எனப் பச்சைப் பொய் சொன்னவர் தான் பழனிசாமி. அந்த CAA சட்டத்தை SIR வழியாக அமல்படுத்தத் துடிக்கும் பாஜகவுக்குத் துணை போகும் எடப்பாடி பழனிசாமிக்கு தேர்தலில் பாடம் புகுத்துவார்கள். எத்தனை தில்லு முல்லுகளைச் செய்தாலும் சரி எத்தனைக் குறுக்கு வழிகளில் வந்தாலும் சரி தமிழ்நாட்டில் பாஜகவின் எந்தச் சித்து விளையாட்டும் வெற்றி பெறாது. பழனிசாமியின் பகல் கனவும் பலிக்காது.

நேற்று கட்சி தொடங்கியவர்கள் கூட 'திமுகவுக்கும் எங்களுக்கும்தான் போட்டி' என்று பேசுவதால் பழனிசாமிக்கு பதற்றம் ஏற்பட்டு விட்டது போல. முதலமைச்சரைப் பார்த்து, பாஜகவை விமர்சிக்காமல் எங்களையும் கொஞ்சம் விமர்சியுங்கள் என்று கெஞ்சுகிறார்.

**பா.ஜ.க. வுக்கு முட்டு கொடுக்கிறார்!**

தேர்தல் ஆணையம் வழக்கமாக மேற்கொள்ளும் வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கும் தற்போது மேற்கொண்டு இருக்கும் SIRக்கும் வேறுபாடு தெரியாத அப்பாவி போல நடித்து மக்களை ஏய்க்க நினைக்கிறார் பழனிசாமி. SIR படிவத்தில் எதை நிரப்புவது எதை விடுவது, முந்தைய SIR க்கு பிந்தைய வாக்காளர் பட்டியல் விவரங்களைக் கண்டடைவதில் குழப்பம் எனப் பல்வேறு குளறுபடிகளோடு அவசர அவசரமாக இப்பணியை மேற்கொள்ளத் தேர்தல் ஆணையத்தை நிர்ப்பந்திக்கும் ஒன்றிய பாஜக அரசின் நோக்கம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அது தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைத் திருடுவது மட்டுமே.

பணமதிப்பிழப்பு தொடங்கி தற்போது SIR வரை அனைத்திலும் அப்பாவி மக்களை அல்லல்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளாக்கி அதைக் கண்டு ஆனந்தப்படும் பாஜகவையும் அதன் அடிமைகளையும் என்றும் தமிழ்நாடு ஏற்காது. திமுக எப்போதும் சாமானிய மக்களுக்குத் தோழனாகத் துணை நிற்கும் இயக்கம். SIRக்கு எதிராக ஒரு பக்கம் சட்டப்போராட்டத்தையும் மறுபக்கம் மக்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறது திமுக. ஆனால், அதிமுக அந்த SIRக்கு ஒரு துரும்பைக் கூட கிள்ளி போடாத பழனிசாமி பாஜகவிற்காக முட்டுக்கொடுக்க மட்டும் ஓடோடி வருகிறார்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### கன்னியாகுமரி மேற்கு, கிழக்கு மாவட்ட தி.மு.க. – மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில்

## நாகர்கோவிலில் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் த. மனோ தங்கராஜ் - மேயர் ரெ. மகேஷ் கூட்டறிக்கை!

கன்னியாகுமரி, நவ. 11 –

தமிழ்நாட்டில் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் திடீரென இந்திய தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளதை கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் இன்று (11.11.2025, –செவ்வாய்க்கிழமை) அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தலைவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இந்த சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வின் (S.I.R.) மூலம் தமிழ்நாட்டிலுள்ள சிறுபான்மை யினரின் வாக்குகள், பட்டியல் இன மக்களின் வாக்குகள் மற்றும் பா.ஜ.க. வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றை குறிவைத்து நீக்கும் நோக்கத்தோடு, தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற



வாக்காளர் களை சேர்க்கும் சதித் திட்டத்தோடு ஒன்றிய பா.ஜ.க. அரசை தனக்கு பாதுகாவலாக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனை செய்திட முயன்றிருப்பதோடு, மக்களின் வாக்குரிமையை பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழிதோண்டி புதைப்பதாகவும் உள்ளது.

எனவே, இந்த சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை (S.I.R.) தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி இந்திய தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள்



விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகாரப் போக்கில் இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளதை கண்டித்து, கன்னியாகுமரி ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் வருகிற 11.11.2025, செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் நாகர்கோவில், மாவட்ட தலைமை தபால் நிலையம் அருகில் வைத்து நடைபெற உள்ளது.

ஆகவே, இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலை வர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கன்னியாகுமரி ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க.வின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அனைத்து கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், அனைத்து கூட்டணி கட்சிகளின் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு வெற்றி பெற செய்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

### சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு – காஞ்சிபுரம், வடக்கு – திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட

## மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் - தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள்- மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) கூட்டம்!

### துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. அறிவிப்பு!



சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு – திருவள்ளூர் கிழக்கு, மேற்கு, மத்திய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்ட கழகச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் - தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் - மாவட்ட சட்டத்துறை ஒருங்கிணைப் பாளர்கள் (DLC) கலந்துரையாடல் கூட்டம் 13.11.2025 வியாழக்கிழமை காலை 11.30 மணியளவில் சென்னை, தியாகராயர் நகர், ஓட்டல் அகார்டில் நடைபெறும். இக்கூட்டத்தில் சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. கலந்து கொள்ள உள்ளார்.

அதுபோது மேற்குறிப்பிட்ட அனைவரும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொருள் : கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் 09.11.2025 அன்று நடைபெற்ற காணொலிக் காட்சி கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி கணக்கீட்டு படிவம் (Enumeration Form) மீதான பணிகளை முழுமையாக முடிப்பது குறித்து!

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
09.11.2025

**ஆ.இராசா எம்.பி.**
துணைப் பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சத்தியவாணிமுத்து அம்மையார்

நவம்பர் 11 (1999)



தி.மு.க. தொடங்கப்பட்ட காலம் முதல் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்.

தி.மு.கழக ஆதிதிராவிட நல உரிமைப் பிரிவுத் தலைவராகவும் – மத்திய அமைச்சராகவும் – பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் தலைமையிலான அரசில் அமைச்சராகவும் பணியாற்றியவர்.

தன்னை சுயமரியாதைக் கொள்கைகளுக்கு முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தமிழகம் முழுவதும் சூறாவளிப் பிரச்சாரம் செய்தவர்.

"அறிவியக்க வீராங்கனையாகத் திகழ்ந்து அறிவார்ந்த சமுதாயம் காணத் தொண்டாற்றிய அம்மையார்" என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகச் சார்பில் "பெரியார் விருது" பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

### ரூ.12,70 லட்சம் மதிப்பீட்டில்

## புலிப்பட்டு ஊராட்சியில் புதிய நியாய விலைக் கடை!

### செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்! விஜயகுமார் தலைமை!

செஞ்சி, நவ. 11 –

புலிப்பட்டு ஊராட்சியில் ரூ 12.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டப் பட்ட புதிய நியாய விலைக் கடையை முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ.மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் புலிப்பட்டு ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 12லட்சத்தி 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை கட்டிடம் கட்டப்பட்டு அதன் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் கீதா தியாகராஜன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ கலந்துகொண்டு நியாய விலை கடையை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன்,மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன், ஒன்றிய பொறியாளர் நாராயணசாமி, ஒன்றிய அவைத்தலைவர் வாசு,நிர்வாகிகள் ரவிச்சந்திரன், சின்ன குழந்தை , சேகர், நடராஜன், வடமலை, திவ்ய நாதன் சங்கர்,உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### சிங்கம்புணரி பேரூர் முன்னாள் செயலாளர்

## இரா.அ.கா.சிவஞானம் 7 ஆம் ஆண்டு நினைவு நாள்!

### கழகத்தினர் ஊர்வலமாகச் சென்று அஞ்சலி!

*சிவகங்கை, நவ. 11 -*

*தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞரின் தனிப் பணியாளர் கரு. செயல்மணி சம்மந்தியும் சிங்கம்புணரி முன்னாள் பேரூர் கழக செயலாளருமான இரா. அ.கா. சிவஞானம் அவர்களுடைய ஏழாம் ஆண்டு நினைவு அஞ்சலி இன்று (11.11.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 11 மணி அளவில் அண்ணா மன்றத்திலிருந்து ஊர்வலமாகச் சென்று அவரது இல்லத்தில் திருவு ருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை*



*செலுத்தப்படுகிறது. இதில் சிங்கம்புணரி நகரக் கழக நிர்வாகிகள், தி.மு.க. பிரமுகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துகின்றனர்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி

நவம்பர் 11 (1989)



தென்னாற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகவும் – தமிழக சட்டப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்தில் ஈடுபாடு உடையவராகி மாணவப் பருவத்தில் சுயமரியாதை கொள்கை பரப்பும் பணியில் ஈடுபட்டவர்.

அறிஞர் அண்ணா அவர்களிடம் பற்று கொண்டு தி.மு.க. துவக்கியநாள் முதல் அயராது பணியாற்றிய அஞ்சாநெஞ்சன்.

"கழகத்தின் வீரவேங்கை, சுயமரியாதைச்சுடர், மாவட்ட தளகர்த்தர், கழக உடன்பிறப்புகளுக்கு அரண்போல் விளங்கிய அடலேறு" என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.